CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சுடர் சோதி - 12
Volume - 12

உ
சிவமயம்

ஒளி - 03
Issue - 03

சிவச்சுடர்

SHIVACHUDAR

ஜனவரி - 2025 : JANUARY - 2025

தனிப்பிரதி ரூ.10

Price : Rs..10



வற்றாக் கருணைத் திருநோக்கும் நின்முக மண்டலமும்
சற்றே முகிழ்த்த குறுமூரலும் தடமார் பழகும்
பொற்றாளும் சின்முத்திரையும் நெஞ்சூடு பொறித்து வைப்பாய்
செற்றார் புரம்செற்ற தேவே! பஞ்சாக்கர தேசிகனே.

– மாதவச் சிவஞான யோகிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அச்சிட்டு வெளியிடுபவர் : ஆசிரியர் சு. தட்சிணாமூர்த்தி - 9442392021
ஆசிரியர் குழு :
முனைவர் சி. சிவசங்கரன் - 9442529206
பேரா. இரா. சம்பந்தமூர்த்தி - 9486382348
பேரா. கி. நடராசன் - 9443221630
புலவர் சோ. இராசமாணிக்கம் - 9487442117
ஆலோசகர் : திருப்பணிச் செம்மல் கோமல் கா. சேகர்-9791232555

மணியோசை

குரோதி ஆண்டு தைத் திங்கள் - ஜனவரி-பிப்ரவரி 2025

நாயன்மார் குருபூசை நாட்கள்

சண்டேசுவர நாயனார்	தை 06	உத்திரம்	19.01.2025	ஞாயிறு
திருநீலகண்ட நாயனார்	தை 10	விசாகம்	23.01.2025	வியாழன்
அப்பூதியடிகள் நாயனார்	தை 18	சதயம்	31.01.2025	வெள்ளி
கலிக்கம்பர் நாயனார்	தை 21	இரேவதி	03.02.2025	திங்கள்
கண்ணப்ப நாயனார்	தை 26	மிருகசீரிடம்	08.02.2025	சனி
அரிவாட்டாய நாயனார்	தை 27	திருவாதிரை	09.02.2025	ஞாயிறு

ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் குருபூசை தை 22 அசுபதி 04.02.2025 செவ்வாய்

உ

உயிருக்கு நேராம் தமிழ்

வழங்காத் துறைஇழிந்து நீர்ப்போக்கும் ஒப்ப
விழைவிலாப் பெண்டிர்தோள் சேர்வும் – உழந்து
விருந்தினனாய் வேற்றூர் புகலும் இம்மூன்றும்
அருந்துயரம் காட்டு நெறி – திரிகடுகம் – 4

யாவரும் இறங்கி நீராடும் வழக்கமற்ற துறையில் இறங்கி பெருநீரில்போவதும், தனக்கு ஒப்பாக விருப்பம் இல்லாத பொது மகளிரைச்சேர்வதும்,வருந்தி விருந்தினனாய் அயலூரில் சென்று புகுவதும் ஆகிய இம்மூன்றும் ஒருவனுக்குப் பெருந்துன்பம் தரும் வழிகளாகும்.

தொடர்பு முகவரி :சு. தட்சிணாமூர்த்தி, ஆசிரியர், செல் : 9442392021
55.வடக்கு வீதி, அறுபத்து மூவர்பேட்டை,கூறைநாடு, மயிலாடுதுறை–1

அச்சிட்டோர் : S.R.V. பிரிண்டர்ஸ், சித்தர்க்காடு, மயிலாடுதுறை – 3
செல் : 7502591545. e mail : srvprinters750@gmail.com

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

C.S.S

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

உ

திருச்சிற்றம்பலம்

'உலகும் பல்லுயிரும் ஒன்றி நிறைந்தோங்கி
இலகும் சிவன்எம் இறை' - மறைஞான சம்பந்தர்

பஞ்சப்(பு) இதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்(து) அல ராததுஎன் னே? நெடுந்தாட்கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்த்தோன்செந் நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்(து) இருந்தாய் சகலகலாவல்லியே.

உட்பொருள்

1.ஆசிரியர் உரை - சு.தட்சிணாமூர்த்தி 4
2.வினாவெண்பா - பேரா. இரா.சம்பந்தமூர்த்தி 6
3.வாழ்விற்கு ஒரு மந்திரம் - முனைவர். சி.சிவசங்கரன் 9
4.உவமைகளும் உண்மைகளும் - முனைவர் கருணா.சேகர் 13
5.வைணவத்தின் எல்லை இலாத் தொன்மை
,, - முனைவர் இல.முத்துக்குமாரசாமி 16
6.மன்னியசீர் மாதேவர்க்கு மதிப்புறு மடல்
- கவிஞர் சபா.ப.மகாலிங்கம் 20
7.நூலாசிரியரும்,உரையாசிரியரும் - முனைவர்.மு.சிவச்சந்திரன் 24
8.வாழ்க்கை ஒரு வரமா? சாபமா?
வரமே! - பேராசிரியர் த.அகரமுதல்வன் 26

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியர் உரை

தப்பிலிருந்து தப்பாமல் கற்கும் பாடம்

சு. தட்சிணாமூர்த்தி

அன்பர்களே

சென்ற இதழில் (டிசம்பர் - 2024) ஆறாவது பக்கத்தில் மூன்றாவது பாரா.

பசுவின் மடியில் பால் இருந்தாலும் கன்றின் துணையில்லாமல் அதைப் பெற முடியாது. வேதங்களைப் படிப்பதற்கும், மந்திரங்களை உச்சரிப்பதற்கும் மனம் ஒத்துழைக்க வேண்டும். எனவே மனம் நன்றாக உவமைப் படுத்தப்பட்டது. அதைக் கன்றாக

உவமைப் படுத்தப்பட்டது என்று திருத்திக் கொள்ளவும். பிழையிலிருந்தும் ஒரு புதிய பாடம் கற்றுக் கொள்வோமா வாசகர்களே

நத்தை ஊர்ந்து சென்ற பாதை எழுத்து போல் இருந்தால் அதை ஏரல் எழுத்து எனச் சொல்வர். அவை பொருளற்றவை எனும் பொருளிலேயே வழங்கப்படுகிறது.

குணாட்சரநியாயம் என்று வழங்கும் வழக்கமும் வடமொழியில் உண்டு. குணம் என்றால் ஓலைச்சுவடிகளை செல் அரிக்கிறதல்லவா அந்தச் செல்லுக்குக் குணம் என்று பெயர். ஓலைச் சுவடியில் செல் அரித்த இடம் எழுத்துக்கள் போலும் காணப்படுவதுண்டு. அப்படி காணப் படுபவைகளைக் குணாட்சரம் என்று சொல்வது. அவை சில சமயம் புதிய பொருளையும் கொடுப்பதுண்டு. அவ்வாறு காணும் புதிய பொருளைக் குணாட்சர நியாயம் என்று சொல்வது.

அது போல் "கன்றாக" என்பது "நன்றாக" என்று பிழையாக அச்சிடப்பட்டாலும் அதுவும் நன்றாகத்தான் உள்ளது.

இருந்தாலும் நமது சிவச்சுடர் வாசகர்களின் தேடல் அதிகம் என்பதை நான் அறிவேன். அந்தத் தேடலுக்கு விருந்தாக இந்த உண்மையை உங்களுக்கு உரைக்கிறேன்.

பேராசிரியர் சாமி.கிருஷ்ணமூர்த்தி ஐயா அவர்களுடன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு பேசும் போது அவர் தப்பிலிருந்து தப்பாமல் கற்கும் பாடம் எனும் தலைப்புக் கொடுத்தார்.

கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார். - 404

பொருள்: கல்லாதவனுடைய சொற்கள் ஒரு சமயம் மிக நன்றாக இருந்தாலும் அறிவுடையார் அவற்றை அறிவுச் செறிவாக ஏற்க மாட்டார்கள்.

கல்லாதவன் பேச்சு அறிவு நுட்பம் உள்ளது போல் தோன்றுவது ஏரல் எழுத்துப் போன்றதே என்பார் பரிமேலழகர்.

இதற்குப் புலவர் ஐயா அவர்கள் ஒரு கதை சொல்லி விளக்கினார்கள். அதை வாசகர்கள் அறிவது நல்லது..

மூடன் ஒருவன் தான் செய்த தவறுக்காக காவலர்களிடம் மாட்டிக் கொள்வான். காவலர் அவனை அரசன் முன் நிறுத்துவர். அரசன் அவனிடம் தான் கேட்டும் மூன்று வினாக்களுக்குச் சரியான விடையளித்தால் தான் அவனை விடுதலை செய்வதாகக் கூறுவான். அதன்படி அரசன் கேட்கும் இரண்டு வினாக்களுக்குச் சரியான விடையளித்து விடுவான். மூன்றாவதாக அரசன் ஒரு தவளையைப் பிடித்து ஒரு பாத்திரத்தில் அடைத்து வைத்து எடுத்து வரச்சொல்வான். அதை அந்த மூடனிடம் காட்டி "இதற்குள் என்ன இருக்கிறது என்று சரியாகக் கூறினால் உன்னை விடுதலை செய்கிறேன்" எனக் கூறுவார். மூடன் தனக்குத் தானே மெல்லிய குரலில் "மண்டுகம் இப்படி வந்து மாட்டிக் கொண்டாயே" எனப் புலம்புவான். அவன் மண்டுகம் என்பது தவளையைக் குறிக்கும் என்பதை அரசன் அறிவான். அவன் சரியான விடையைக் கூறிவிட்டதாகக் கருதி அரசன் அவனை விடுதலை செய்தான். தான் என்ன பதிலளித்தோம் என்று மூடனுக்குத் தெரியாது. சரியான பதிலாகக் கொண்டது அரசன்.

மண்டுகம் என்றால் தவளை என்பது அறிந்தது தான். மாண்டுக்ய உபநிடதம் என்று ஒரு உபநிடதம் உண்டு. அப்பெயர்வரக் காரணம் என்னவென்றால் நடந்து சென்று கடக்க வேண்டிய தூரத்தை இரண்டு தாவலில் சென்றடைந்துவிடுவது போல் இறைவன் திருவடி அடைய சுலபமான வழியைச் சொன்னதால் அதற்கு மாண்டுக்ய உபநிடதம் என்று பெயர்.

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

திருச்சிற்றம்பலம்

வினாவெண்பா

பனிரெண்டாம் நூற்பா தொடர்ச்சி சிவபோகம்

பேராசிரியர் இரா. சம்பந்தமூர்த்தி

சென்ற இதழ் தொடர்ச்சி

சிவபெருமான் உயிர்களுடன் அத்துவிதமாகக் கலந்து நின்று உயிர்களுக்கு வினைப்பயன்களை ஊட்டுகின்றான் என்று அறிந்தோம். மேலும் உயிர்கள் பெத்த நிலையில் மலமறைப்பால் இவற்றை அறிவது இல்லை. உயிர் படி முறையில் பக்குவமுற்று சுத்த நிலையில் திருவருள் வயப்பட்டுச் சிவத்தோடு அழுந்துதல் எல்லாம் இறைவன் செயலே எனக்கண்டு தெளிகிறது என்று பார்த்தோம். இக்கருத்தை வலியுறுத்தும் சில திருமுறைப் பாடல்களையும் மெய்கண்ட சாத்திரப் பாடல்களையும் ஆராய்வோம்.

உயிர்களின் அறிவு அறிவிக்கும் பொருளின்றி ஒன்றையும் அறியாது. கண் பிறிதோர் ஒளியன்றித் தானே உருவத்தைக் காணாது. அது போல இறைவன் உயிரறிவில் கலந்து பொருள்களை அறியச் செய்வான். இது காட்டும் உபகாரம் எனப்படும். கதிரவன் ஒளியால் விளக்கம் பெற்ற கண் தானே சென்று உருவத்தைக் காணாது. ஆன்ம அறிவும் உடன் சென்று அறிந்தால்தான் கண் உருவத்தைக் காணும். அதுபோல இறைவன் உயிருடன் அப்பொருள்களை அறியும்படி உடன் நின்று அறிதலே காணும் உபகாரம். இவ்வாறு காணும், காட்டும் உபகாரத்தால் கண்ணுக்குப் பயன் இல்லாது உயிர்க்கே பயன் ஆகும். அதுபோல இறைவன் உயிர்களுக்குச் செய்யும் காணும், காட்டும் உபகாரங்கள் இறைவனுக்குப் பயனின்றி உயிரே அடையும் என்பதாம்.

திருமாளிகைத் தேவர் அருளிய ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா ஒளிவளர் விளக்கே பதிகத்தில் அனைத்துப் பாடல்களும் இறைவன் உயிர்களுக்குக் காட்டும் உபகாரத்தையும் காணும் உபகாரத்தையும் விளக்குவதாக அமைந்துள்ளன.

தொண்டனாகிய நான் உன்னைத் துதிக்குமாறு திருவுள்ளம் பற்றவும், வணங்கும்படியாகவும் தியானிக்குமாறும்; புகழுமாறும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அணுகுமாறும் என்று இறைவனை பலவாறு வழிபட நீ எனக்கு அருள் செய்ய வேண்டும் என அருள்கிறார்.

தொண்டனேன் விளம்புமா விளம்பே. 9-1-2
தொண்டனேன் பணியுமா பணியே 9-1-3
தொண்டனேன் கருதுமாறு கருதே
தொண்டனேன் உரைக்குமாறுறையே 9-1-4
தொண்டனேன் நுணுகுமா நுணுகே. 9-1-5

காரைக்கால் அம்மையார் அருளிய அற்புத அந்தாதியில்

அறிவானும் தானே; அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - (அ.திருவந்தாதி - 20)

அறிவானும் தானே என்றது உயிர்க்கு அறிவித்தல் பொருட்டுத் தானே அறிதல் அதாவது காட்டும் உபகாரம் ஆகும். அறிவாய் அறிகின்றான் என்றது அறிவிக்கப்பட்ட பொருளை ஆன்மா அறிந்து அதன் கண் அழுந்தி அதனோடு உடன் சென்று அப்பொருளை அறிதலையும் குறித்தலாகும். இது காணும் உபகாரம் ஆகும்.

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன் கழல் செலுமே. - சி.போதம்.

மெய்கண்டார், இறைவன் கண் போல அறிவிக்க அறியும் தன்மையுடைய உயிருக்குப் பொருளை அறிந்து செயல்பட அவ்வுயிரோடு கலந்து நின்று அறிவித்தும் அறிந்தும் வருவான். இவ்வாறு உயிர்களுக்கு அறிவித்தும் உடன் நின்று அறிந்தும் வரும் அத்துவித நிலையை மறவாது அன்பு செய்ய முதல்வன் திருவடியாகிய சிவானந்த அனுபவத்தை உயிர் பெறும் என்று அருளுவார். இக்கருத்தை வலியுறுத்திய வழிநூல் ஆசிரியரும் சித்தியார் சுபக்கத்தில்,

காயம் ஒழிந்தால் சுத்தன் ஆகி, ஆன்மாக்
காட்டக் கண்டிடும் தன்மை உடைய கண்ணுக்கு
ஏயும் உயிர் காட்டிக் கண்டிடுமா போல
ஈசன் உயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன் இத்தை
ஆயும் அறிவு உடையனாய் அன்பு செய்ய
அந்நிலைமை இந்நிலையில் அடைந்த முறையாலே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மாயம் எலாம் நீங்கி, அரன்மலர் அடிக்கீழ் இருப்பன்
மாறாத சிவாநுபவம் மருவிக் கொண்டே.

– சித்தி.சுப-310.

உயிர் வீடுபேறு அடைந்த நிலையில் அநாதியே உள்ள ஆணவமலம் நீங்கும்; அதுபோல அநாதியே உயிருடன் உள்ள இறைவன் நீங்குவதில்லை. ஆகவே பெத்த நிலையிலும் முத்தி நிலையிலும் ஆன்மாக்கள் இறைவன் திருவடியை இன்றி அறிவு செயல்கள் விளங்காது மேலும் விளங்கியப் பிறகும் விடயத்தில் சென்று பற்றவும் முடியாது. எழுத்துக்கள் எல்லாம் இயங்கும் பொருட்டு அகரமாகிய நாதம் எழுத்து உடன் நிற்பது போல ஆன்மாக்களுக்கு அறிவும் செயலும் விளங்குதல் பொருட்டு இறைவன் ஆன்மாக்களோடு கலந்து நிற்பன். இது காட்டும் உபகாரம் ஆகும். அவ்வாறு விளங்கிய ஆன்மாவின் அறிவும் செயலும் விடயத்தில் சென்று பற்றுதல் பொருட்டு இறைவன் உயிர்களை இடமாகக் கொண்டு உயிர்கள் செல்லும் வழிகளில் எல்லாம் சென்று விடயங்களிலும் உடனாய்க் கலந்து நிற்பன் இது காணும் உபகாரமாகும். இதை அருணந்தி சிவம் தனது சித்தியார் நூலில் விளக்குவார்.

எவ்விடத்தும் இறை அடியை இன்றி அமைந்து ஒன்றை
அறிந்து இயற்றியிடா உயிர்கள், ஈசன் தானும்
செவ்விதினில் உளம் புகுந்து செய்தி எலாம் உணர்ந்து
சேட்டிப்பித்து எங்குமாய்ச் செறிந்து நிற்பன்;
இவ்வுயிர்கள் தோற்றும் போது, அவனை இன்றித் தோற்றா;
இவற்றினுக்கு அம்முதல் எழுத்துக்கு எல்லாமாய் நிற்கும்.
அவ்வுயிர் போல் நின்றிடுவன்; ஆதலால் நாம்
அரனடியை அகன்று நிற்பது எங்கே யாமே? –சித்தி-316.

இந்நூற்பாவில் ஏகனாகி இறைபணி நிற்கவும் நம் செயலற்று யாவும் நாதன் தன் செயலைக் கண்டு பிரிவில்லாத சுத்தாத்துவித சிவப்பேற்று வாழ்வினை இம்மையிலேயே எய்திப் பெற வேண்டும் என வலியுறுத்துவதாக அமைந்து உள்ளது.

திருச்சிற்றம்பலம்

நூற்பா முற்றும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

திருச்சிற்றம்பலம்

வாழ்விற்கு ஒரு மந்திரம்

முனைவர் சி. சிவசங்கரன் - 94425 29206

அடி - முடி தேடல்

பிராணே நான்

பிரமனும் மாலும் "பிரானே நான்" என்னப்

பிரம்மதேவன் – திருமால் ஆகிய இவர்கள் தாம் தாம் தலைவர் என்று

பேதைமை

" *பிரமன்மால் தங்கள்தம் பேதைமை யாலே* "

பிரமனும், திருமாலும் தங்களுக்கு மேல் ஒரு தலைவன் உளன் என்பதை மறந்து அறியாமை காரணமாக தாம் தாம் தலைவர் என்று கூறிக் கொண்டு இறைவனிடம் செல்ல.

தீயாய்ப் பரந்து நின்றான்

" *பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க*"

இந்த நிலையில் பரமன் அவர்கள் முன்னே அழல் பிழம்பாய் நின்று அடி முடி காண்பவர் பெரியவர் என்று அசரீரியாக இருந்து கூறினான்.

அடி, முடி தேடி அரற்றுதல்

"*அரனடி தேடி அரற்றுகின் றாரே*"

அவர்கள் இருவரும் (பிரமனும் – திருமாலும்) இறைவனின் முடியையும் பாதத்தையும் தேடிக் காணப் பெறாமல் கதறினார்கள்

பிரமனும் மாலும் "பிரானே நான்" என்னப்
பிரமன்மால் தங்கள்தம் பேதைமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரனடி தேடி அரற்றுகின் றாரே"

– திருமந்.பா.எ:372.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரமனும் - மாலும் காண இயலாத பரமன்

உயிர்களைப் படைப்பவன் பிரமன். படைத்தவற்றைக் காப்பவன் திருமால். படைக்கும் பிரமன் தானே தலைவன் என்றனன். (பிரமனால் காக்க முடியாது) படைத்தவை காக்கப்படாவிடின் பயன் இல்லை. ஆதலின் காக்கின்ற தானே தலைவன் என்றனன் திருமால். இவ்விருவரும் தங்களுக்கு மேல் ஒரு தலைவன் உள்ளான் என்பதை மறந்தனர். தாமே பெரியவர் என்று அறியாமையால் எண்ணினர். இந்நிலையில் இறைவன் அனல் பிழம்பாய்ப் பரந்து நின்றனன். தன் அடி முடி காண்பவர் பெரியார் என்று அசரீரியாய்க் கூறினன். உடனே திருமால் பன்றி வடிவாகவும், பிரமன் அன்னப்பறவை வடிவமாகவும் அடிமுடி தேடலாயினர். எனினும் கண்டிலர். கதறினர் இறைவன் மால், பிரமன் இருவரிலும் பெரியன் என்ற குறிப்புத் தோன்றலே பரமன் எனப்பட்டான்.

கண்டு கொண்டேன்

அண்ணல்

"*ஆம் ஏழ் உலகுற நின்றிடும் அண்ணலுந்*"

ஏழு உலகங்களும் ஒன்றாய்ப் பொருந்துமாறு அழற் பிழம்பாய் நின்றருளியவன் எம் அண்ணலாகிய சிவபெருமான்

அழற்பிழம்பு

"*தாம்ஏழ் உலகில் தழற்பிழம் பாய்நிற்கும்*"

தானே ஏழு உலகங்களிலும் அக்கினி வடிவாய்ப் பரவித் திகழ்கிறான்.

மணிகண்டன்

"*வான் ஏழுலகு உறும்மா மணிகண்டனை*"

வானத்தின் கண்ணே இருப்பதாகக் கூறப்படும் ஏழு உலகங்களிலும் பொருந்தி நிற்கும் திருநீலகண்டத்தையுடையவனும் சிவனே!

நானறிந்தேன்

"*நானே அறிந்தேன் அவன்ஆண்மை யாலே*"

அச்சிவபெருமான் அடியவனாகிய நான், அவன் திருவடிக் கண்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வைத்த காதலால் என்னை ஆட்கொண்டருளினான். அவன் அருளால் நான்முகனும், திருமாலும் காண இயலாதவனை நான் கண்டேன்.

ஆம் ஏழ் உலகுற நின்றிடும் அண்ணலுந்
தாம்ஏழ் உலகில் தழற்பிழம் பாய்நிற்கும்
வான் ஏழுலகு உறும்மா மணிகண்டனை
நானே அறிந்தேன் அவன்ஆண்மை யாலே

–திருமந்திரம் / பா.எ.373.

மாலும், நான்முகனும் அறியாதவனை நான் அறிந்தேன்

ஏழுலகமும் ஒன்றாய்ப் பொருந்துமாறு அழற்பிழம்பாய் நின்றருளியவன் அண்ணலாகிய சிவபெருமான். அவன் இயற்கையிலேயே உலகமே உருவாய் நிற்பவன். வானத்துக் கூறப்படும் ஏழு உலகங்களிலும் பொருந்தி நிற்கும் திருநீலகண்டத்தை யுடையவனும் சிவனே. அவன் திருவடிக்கண் வைத்த அன்பினால் என்னை ஆட்கொண்டு அருள் செய்தான். அவன் அருளாலே அவன் திருவடியினை நான் அறிந்தேன்.

ஆண்மை – திருவாணை – திருவருள்
மாமணிகண்டன் – நீலகண்டன்
தழல் பிழம்பு – அனல்பேரொளி

ஆங்கிங்கெனாதபடி எங்கும் நின்றான்

ஊன் உயிர் உணர்வு

"*ஊனாய், உயிராய், உணர்வு அங்கியாய் முன்னம்*"

உடலாகவும் உலகத்து உறையும் உயிராகவும் அவ்வுயிரின் உணர்வாகவும், நீக்கமற நிறைந்து காத்தருள்பவன் சிவன். அக்கினியாய் இருப்பவனும் சிவனே! முன்னம் அறியாமை மிக்குச் சண்டையிட்ட அயனும், அரியும் தெளியும் வண்ணம்.

வானோங்கி உயர்தல்

"*சேணாய் வான் ஓங்கி திருஉருவாய் அண்டத்*"

தீப்பிழம்பாய் அண்டமுற நிமிர்ந்த நின்றவனும் அவனே!.

தானு

"*தானுவும் ஞாயிறும் தண்மதியும் கடந்து*"

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அண்டங்களுக்கு ஆதாரமாகத் திகழும். அண்டங்களைத் தாங்கும் தூணும் அவனே; ஞாயிற்றையும் திங்களையும் கடந்து நிற்பவனும் சிவனே!

அண்டங்களை ஆளுதல்

" ஆண்முழு தண்டமு மாகிநின் றானே"

அனைத்து அண்டங்களையும் ஆளும் அண்ணலாய் நின்று எவ்வுயிர்க்கும் அருள் செய்பவன் அவனே!

எங்கும் நிறைந்த பரம்பொருள்

"ஊனாய், உயிராய், உணர்வு அங்கியாய் முன்னம்
சேணாய் வான் ஓங்கி திருஉருவாய் அண்டத்
தாணுவும் ஞாயிறும் தண்மதியும் கடந்து
ஆண்முழு தண்டமு மாகிநின் றானே "

–திருமந்திரம் / பா.எண்–374.

எல்லாமாய் நின்றாய் சிவனே

இறைவன் உடம்பாகவும், உடம்பகத்து உறையும் உயிராகவும், அவ்வுயிரின் உணர்வாகவும் நீக்கமற நிறைந்திருப்பவன். அக்கினியாய் ஒளிர்பவனும் அவனே! முன்னர் அயனும், அரியும் தம்முள் சண்டையிட்டு அறியாமையால் உழன்ற போது தொலைப் பொருளாகவும் வானளவும் ஓங்கிப் பேரொளிப் பிழம்பாய்த் திகழ்ந்தவன் அவன். அண்டங்களைத் தாங்கி நிற்கும் தூணும் அவன். ஞாயிற்றையும் திங்களையும், கடந்து நிற்பவன் சிவன். அனைத்து அண்டங்களையும் ஆளும் அண்ணலாய் நின்றருள்பவன் எம் அண்ணலாகிய சிவன்.

அங்கி – அக்கினி

சேணாய் – தொலைவாய்

அண்டத்தாணு – அண்டங்களைத் தாங்குகின்ற தூண்.

திருச்சிற்றம்பலம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

உ

திருச்சிற்றம்பலம்.

உவமைகளும் உண்மைகளும்

முனைவர் கருணா சேகர்
முன்னைத் தமிழ்த்துறைத் தலைவர், த.ஆ.க.கல்லூரி, தருமபுரம், மயிலாடுதுறை.
செல்: 9442391599

"நீயியற்ற ஓர் பொருளை நிச்சயித்த நாயேனும்
போயியற்றல் செய்யப் புரிகுவேன் நீயியற்றல்
ஆக்காது அணுவும் அசையும் அவ்விகற்பந்
தாக்காத சொக்க நாதா"

என்பது தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீகுருஞானசம்பந்தரின் வாக்கு. இறைவன் படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல் முதலிய தொழில்களைச் செய்திடப் பற்பல திருமேனிகளைக் கொண்டாலும் நம்மைப் போலவே இளைப்பும், களைப்பும், விருப்பும், வெறுப்பும் இன்பமும் துன்பமும் போன்ற வேறுபாடுகளை அடைய மாட்டானோ எனின் இவ்வேறுபாடுகள் எல்லாம் சிற்றறிவும் சிறிதாற்றலும் உடையவனாய்ப் பாசத்திற்கு கட்டுண்டு கிடக்கும் உயிர்களுக்கு உள்ளவாமன்றில் பேரறிவும் பேராற்றலும் உடையவனாய் பாசப் பற்றின்றித் தூயனாய் இறைவனுக்கு ஒரு சிறிதும் உள்ளனவாகா. அவன் செயல்களை நம்மைப் போலக் கருவிகளைக் கொண்டு செய்யாது சங்கற்ப (நினைவு) மாத்திரையிற் செய்தலால் மேற்கூறிய மாறுபாடுகள் உளவாதற்கில்லை. இதனை நோக்காதே நோக்கி எனும் வெண்பாவில் மெய்கண்டார் விளக்குகிறார். இதனையே "அவ்விகற்பம் தாக்காத சொக்கநாதா" என்று பாடுகிறார் ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமான்.

ஒருவனாகிய இறைவன் ஐந்தொழில் நிகழ்த்தும் காலத்தில் பல்வேறு வடிவங்களையும் பல நிலைகளையும் எய்தி உயிர்கட்கு அருள்புரிவான். இலயம், போகம், அதிகாரம் என்பவை அவன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எய்தும் மூன்று நிலை வேறுபாடுகளாம்.

இலயம் என்பது தொழில் செய்யக் கருதும் நிலை

போகம் என்பது தொழில் செய்யப் புகும் நிலை

அதிகாரம் என்பது தொழிலை இயற்றி நிற்கும் நிலை

இலய நிலையில் முதல்வன் புலனாகாத அருவமாய் நிற்பான். போக நிலையில் ஒளிப்பிழம்பாகிய அருவுருவாய் நிற்பன். அதிகார நிலையில் பல்வேறு உருவங்களைக் கொண்டு நிற்பன்.

இலயம், போகம் அதிகாரம் என்னும் இம்மூன்று நிலைகளால் அவன் தன் தன்மையில் திரிபு உடையவன் போலத் தோன்றினாலும் உண்மையில் தனது இயற்கை நிலையில் சிறிதும் மாற்றம் இன்றி நிற்பவனாய் இருப்பன்.

ஒரு எடுத்துக்காட்டினைக் காணலாம். உலகியலில் ஒரு நாடக நடிகன் பல்வேறு வேடங்களில் தோன்றி நடித்தாலும், அப்பாத்திரங்களாகவே தன்னைக் காட்டிய போதிலும், அவனது தன்மை அவற்றால் சிறிதும் வேறுபடுவதில்லை. நடிப்பில் வல்லான் ஒருவன் புனைந்து கொள்ளும் அவ்வேடங்கள் போல்வனவே முதல்வன் மேற்கொள்ளும் பல்வேறு வடிவங்களும் நிலை வேறுபாடுகளும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். எனவே, இறைவன் தன் செயல்களைச் செய்கிற போது செயல்களால் தன் நிலையில் திரியாமல் இருக்கிறான். இதனையே திருக்களிற்றுப்படியாரில் பாடல் ஒன்று ஒரு உவமையின் வழி அழகாக விளக்குகிறது. முதலில் அப்பாடலைக் காணலாம்.

உன்னுதரத்தே கிடந்த கீடம் உறுவதெல்லாம்
உன்னுடைய தென்னாய் நீ உற்றனையோ – மன்னுயிர்கள்
அவ்வகையே காண் இங்கழிவதுவும் ஆவதுவும்
செவ்வகையே நின்ற சிவன் பால்

இதன் பொருள்

உன் வயிற்றிலே கிடந்த புழுவானது படும் துன்பமெல்லாம் உன்னுடைய துன்பமென்று சொல்ல மாட்டாய்: நீ அவற்றை நுகராமையால் அவ்வாறே சிவன்பால் நின்ற மன்னுயிர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தோன்றுவதும் அழிவதுமாகிய செய்கை வகைகளால் அவை துன்புறுமே அன்றி அவன் துன்புறான் அறிக.

உயிர்கள் அது செய்யும் செயல்களால் விருப்பு வெறுப்பு கொள்கின்றன. அதனால் அவை துன்புறுகின்றன. இறைவன் அவ்வாறின்று உயிர்களின் வினைக்கேற்ப கடமையைச் செய்வதால் அவன் துன்பம் அடைவதில்லை. ஒரு நடிகனைப் போல ஒரு செயலைச் செய்துவிட்டு அதிலிருந்து வெளியேறி விடுகிறான்.

பசுவின் அறிவு அது அடையும் பொருளின் தன்மையாக மாறிவிடும் தன்மையை உடையது. எப்படி உடல் செய்யும் காரியங்களுக்கு உயிர் பொறுப்பாகிவிடுகிறதோ அதுபோல ஆன்மா தன் செயல்களில் விருப்பு வெறுப்பு கொள்வதால் இது நிகழ்கிறது. இதனைச் சித்தாந்தம் "சார்ந்ததன் வண்ணம்" என்று பேசுகிறது. "நிலத்தியல்பால் நீர் திரிந்தற்று" என்னும் உவமையால் இதனை விளங்கிக் கொள்ளலாம்.

பதியின் அறிவு நேர்மாறானது; அது தன்னை அடைந்த பொருள்களையெல்லாம் தன் வண்ணமாகச் செய்துவிடும் தன்மையது. இது தன்னை அறிவிப்பதற்குப் பிறிதொரு பொருளை வேண்டாதது; தானே அறிவதன்றியும் பிறிதொன்றினை அறிவிக்கவும் வல்லது. இத்தன்மையால் பதியின் அறிவு பாசத்தால் மறைக்கப்படாதது.

இறைவன் எல்லாவற்றிலும் பரிபூரணமாக கலந்து நிற்பான். ஆனால் எவற்றுள்ளும் அதுவயமாய் மாறமாட்டான். விருப்பு வெறுப்பின்றி தன் கடமையை மட்டும் ஆற்றுவான். ஒரு காலும் அவன் திரிபு அடைவதில்லை. உயிர்கள் தான் ஒவ்வொன்றிலும் திரிபைக் கொள்கின்றன. காரணம் பாசத்தால் இத்துன்பத்தைப் பெறுகின்றன. பாசம் நீங்கினால் பதியைப் போல் பசுவும் துன்பமின்றி வாழலாம். அந்நிலை அவ்வளவு எளிதா என்பதை உயிர்களின் முயற்சியின் அளவில் உள்ளது.

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

CENTRE FOR SHAIVA STUDIES Pondicherry

உ

திருச்சிற்றம்பலம்

வைணவத்தின் எல்லை இலாத் தொன்மை

கேப்டன் இல. முத்துக்குமாரசாமி

முன்னாள் முதல்வர், எம்.ஆர்.கே.கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

காட்டுமன்னார்கோயில் & சேந்தங்குடி, மயிலாடுதுறை. 9344065951.

சென்ற இதழ் தொடர்ச்சி

அன்பார்ந்த சிவச்சுடர் வாசகர்களே! வணக்கம்,

சென்ற கட்டுரையில் ராமானுஜருடைய ஆளுமை பற்றியும் அவர் சமயம் வளர்த்த பாங்கினையும் பற்றிப் பார்த்தோம்.

ராமானுஜர் திருமாலினுடைய ஆதிசேஷனின் அவதாரம் என்று கூறுவார்கள். ராமானுஜர் அனைத்து மனிதர்களும் சமமானவர்களே என்று நிலை நாட்டியவர். அவருடைய மடத்தில் இருந்து காவேரிக்கு நீராடச் செல்லும் போது தன்னுடைய சீடரான முதலியாண்டன் கையில் கைலாகு போட்டுச் செல்வார். நீராடிவிட்டுத் திரும்பும் போது திருக்குலத்தவனான மாறனேரிநம்பி கையில் கைலாகு போட்டு வருவாராம். இதனை அவருடைய சொற்பொழிவின் போது கேள்வி நேரத்தில் சீடர்கள் இதனுடைய விளக்கம் என்ன என்று கேட்டுள்ளார்கள். அதற்கு ராமானுஜர் மனிதனுக்கு உள்ள மூவகைச் செருக்குகளில், குலச்செருக்கு, அதாவது தான் உயர்குடியில் பிறந்தவன் என்ற ஆணவம் என்பது ஒன்று மாறனேறி நம்பி தாழ்ந்த குலத்தில் பிறந்தவராக இருப்பதால் அவருக்கு குலச்செருக்கு இருக்க வாய்ப்பு இல்லை. எனவே நான் நீராடிய பிறகு அதாவது புறத்தூய்மை செய்து கொண்ட பிறகு குலச்செருக்கு இல்லாத வரை கைலாகு போட்டு வருவதன் மூலம் என் மனதில் உயர்குடியில் பிறந்தவன் என்ற செருக்கு இருக்குமேயானால் அது தீயில்பட்ட தூசாகிவிடும். நான் பவித்திரம் அடைந்தவன் ஆவேன். அதற்காகத்தான் இப்படிச் செய்கின்றேன் என்று பதில் அளித்தார். இதுபோன்று அவருடைய வாழ்க்கையில் பல உதாரணங்களைக் கொள்ளலாம்.

சம்பத்குமாரர், சிலையை டில்லி பாதுஷாவிடம் இருந்து வாங்கி வரும் போது இவர் திருநாராயணபுரம் அருகில் உள்ள தாழ்ந்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குலத்தவர் வசிக்கும் ஒரு தெருவில் தன்னைத் துரத்தி வரும் போர்வீரர்களிடம் இருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக மறைந்து கொண்டார்.

பாதுஷாவின் வீரர்கள் தேடும்போது ஒரு பிராமணர் எவ்வாறு எங்கள் தெருவுக்கு வருவார் என்று அந்தத் தெருவாசிகள் சொல்லி விட்டார்கள். போர்வீரர்கள் திரும்பிப் போய்விட்டார்கள். அதற்குக் கைமாறாகத் திருநாராயணபுரம் வைரமுடிச்சேவையின் உற்சவத்தில் மூன்று நாட்கள். அந்தத் தெருவாசிகள் கோயிலுக்குள் வந்து மண்டகப்படி செய்யலாம் என்ற உரிமையை அவர்களுக்கு ராமானுஜர் உரிமை வழங்கி உள்ளார். இந்நிகழ்வு பன்னிரண்டாம் நூற்றாண்டில் நடந்தது.

இப்படிப் பல நிகழ்வுகளை ராமானுஜர் வாழ்க்கையில் சுட்டிக்காட்டலாம்.

திருக்கோட்டியூர் நம்பிகளிடம் பதினெட்டு முறை திருவரங்கத்தில் இருந்து திருக்கோட்டியூர்க்கு நடந்து சென்று தான் கற்ற திரு எட்டெழுத்தின் விளக்கத்தை யாருக்கும் சொல்ல மாட்டேன் என்று சொல்லி சத்தியம் செய்து கொடுத்ததை மீறி திருக்கோட்டியூர் கோபுரத்தில் ஏறிநின்று அனைத்து மக்களையும் அழைத்து அஷ்டாச்சரத்தின் பொருளை ஊர் அறியப் பகர்ந்தார்.

குருநாதர் உடனே அழைத்து விசாரித்த போது ஊர்மக்கள் உய்வதற்காக நான் ஒருவன் செய்து கொடுத்த சத்தியத்தை மீறி நரகத்திற்குச் சென்றாலும் பரவாயில்லை என்று பதில் கூறினாராம்.

வேறு குலத்தில் பிறந்த திருக்கச்சி நம்பிகளைத் தன் குருவாகக் கொண்டவர் ராமானுஜர். இப்படி ராமனுஜர் வாழ்க்கையில் நம்மால் பல நிகழ்வுகளைக் காட்டலாம். இன்றளவும் ராமானுஜர் நிறுவிய விசிஷ்டாத்வைத தத்துவம் பல அறிஞர்களால் ஆங்கிலத்தில் உயர்ந்த முறையில் எழுதப்பட்டு உலக அளவில் பல்கலைக் கழகங்களில் போற்றப்படுகிறது.

ராமானுஜருக்குப் பிறகு அவருடைய சீடர்கள் இராமானுஜரின் தத்துவத்தை மக்களிடம் பிரச்சாரம் செய்து நிலைநாட்டினார்கள். இராமானுஜரின் ஒன்றுவிட்ட சகோதரர் முதலியாண்டானும், கூரத்தாழ்வாரும் அவரின் இறுதிக்காலம் வரை உடனிருந்தனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவர்களுக்குப் பிறகு பிள்ளை லோகாச்சாரியார், ஒரு சிறந்த ஆளுமை உள்ளவராக இருந்தார் இவர் நம்பிள்ளையின் சீடராவார். வேதாந்த தேசிகருக்குச் சமகாலத்தவர் ஆவார்.

இக்காலத்தில் தான் வேதாந்த தேசிகரால் வடகலை தோற்றுவிக்கப்பட்டது. பிள்ளைலோகாச்சாரியார் அஷ்டாதச இரகசியங்கள் என்ற பதினெட்டு வைணவ சாத்திரநூல்களை அருளியவர் ஆவார். அவற்றில் ஸ்ரீவசனபூசணம், அர்த்தபஞ்சகம், முமூட்சுபடி போன்றவை முக்கிய நூல்கள் ஆகும். அதே காலத்தில் வாழ்ந்த வேதாந்த தேசிகர் வேதங்கள், உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை போன்ற வடமொழி நூல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அந்நூல்கள் வழங்கும் கருத்துக்களை உலகோர் அறியச் செய்தார். வேதாந்த தேசிகர் (1268-1369) காஞ்சிபுரத்தில் பிறந்தவர், திருவகீந்திரபுரம் ஹயக்கிரீவர் திருவருளைப் பெற்றவர். இவர்களுடைய காலம் தென்னகத்தில் அன்னியர் படையெடுப்பில் சிக்கி அமைதி இழந்த காலம். மக்கள் அமைதியுடன் வாழ்வதற்காக வேதாந்த தேசிகர் "அபீதி ஸ்தவம்" எனும் நூலை எழுதியுள்ளார். இவர் தமிழிலும் மணிப்பிவாளத்திலும் நூற்றுக் கணக்கான நூல்களை எழுதியுள்ளார். பிள்ளை லோகாச்சாரியரும் வேதாந்த தேசிகரும் தென்கலைக்கும் வடகலைக்கும் கிடைத்த ஒப்பற்ற ஆளுமைகள்.

பிள்ளை லோகாச்சாரியாருக்குப் பிறகு மணவாளமாமுனிகள் (1370-1443) தலைமை தாங்கித் தென்கலை வைணவத்தை வழி நடத்தியுள்ளார். இவர் ஆழ்வார் திருநகரியில் பிறந்தவர் ஆவார். இவருடைய மடம் ஸ்ரீரங்கத்தில் ரங்கா ரங்கா கோபுரத்திற்கு எதிரே இன்றும் உள்ளது. இவர் திருவாய்மொழி நூற்றந்தாதி, உபதேச ரத்தினமாலை போன்ற நூல்களை எழுதியுள்ளார். ஆழ்வார்களுடைய பிரபந்தங்களை உலகறியச் செய்தவர் மணவாளமாமுனிகள்.

அன்னியர் படையெடுப்பின் போது ஸ்ரீரங்கம் அரங்கநாதரை காளையார் கோயில் காடுகளுக்கு எடுத்துச் சென்று பாதுகாத்தவர் பிள்ளை லோகாச்சாரியார். அங்கேயே அவர் திருநாடு அலங்கரித்துவிட்டார். இந்நாளில் வடகலை, தென்கலைப் பிரிவு தீவிரமடைந்தது வடகலைக்கும் தென்கலைக்குமான வேறுபாடுகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பல உண்டு தென்கலையினர் பாதம் வைத்து திருமண் காப்பிட்டுக் கொள்வார். வடகலையினர் பாதமில்லாமல் திருநாமம் இட்டுக்கொள்வர். தென்கலையினர் இலக்குமியை உயிரே போன்று போற்றுவர். வடகலையினர் இலக்குமியை இறைவனைப் போல் போற்றுவர் நினைப்பார்கள். தென்கலை இறைவனை அடைவதற்குக் கடமை, பத்தி, பிரபத்தி, ஆசார்ய அபிமானம் அனைத்தும் தேவையாகும். வடகலையில் பக்தியும் சரணாகதியும் போது மானவையாகும். தென்கலையில் வீடுபேற்றிற்கு இறைவனே காரணம் வடகலையில் வீடு பேற்றிற்கு பிரபத்தியே காரணம். தென்கலையில் வீடுபேறு அடைந்தவர் நிலைத்திருப்பவர். வடகலையில் வீடுபேறு அடைந்தவர். வைகுண்டம் சென்றடைபவர் தென்கலையில் இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள உறவு அகவயமானது. வடகலையில் இவ்வுறவு புறவயமானது. தென்கலையில் பெரிய பிராட்டி ஆன்மாக்களின் வேண்டுதலைப் பரிந்துரைப்பவள். வடகலையில் பெரிய பிராட்டி தானே வீடு பேற்றை அளிக்க வல்லவள். வைணவம் அன்னியர் படையெடுப்பினாலும் ஆக்கிரமிப்பினாலும், கள்வர்களாலும் தாக்குண்ட போதும் சிதைவுபடாமல் உள்ளது. தனித்துவத்தையும் கலாசாரத்தையும் காத்து வருகிறது. தென்கலை சம்பிராதாயத்தை ஜீயர் மடங்களும் வடகலை சம்பிரதாயத்தை அகோபில மடம் போன்ற மடங்களும் சிறப்பாக நிர்வகித்து வருகின்றன.

நண்பர்களே! தமிழக அரசில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை 1990 களில் மயிலாடுதுறை மண்டலத்தில் கும்பகோணம், விழுப்புரம், கடலூர் போன்ற ஊர்களில் உள்ள கோயில்களில் நடத்திய இந்து சமய புத்தொளிப் பயிற்சியில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்ற கிடைத்த வாய்ப்பினால் இது போன்ற கட்டுரைகள் எழுத எளிமையாக உள்ளது. ஒரு ஊரில் புத்தொளிப் பயிற்சி என்றால் பத்து நாட்கள் நடைபெறும். காலை பத்து மணி முதல் இரவு ஏழு மணி வரை அறிஞர் பெருமக்கள் சொற்பொழிவாற்றுவர்.

வாசகர்களுக்குப் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து நிறைவு செய்கிறேன். அடுத்த இதழில் சந்திப்போம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

திருச்சிற்றம்பலம்

மன்னிய சீர் மாதேவர்க்கு மதிப்புறு மடல்- 7

கவிஞர் இளையதீபன் சபா.ப.மகாலிங்கம்
உதவித் தலைமையாசிரியர் (பணி நிறைவு) தி.ஆ.மே.நி.பள்ளி, திருவிடைமருதூர்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவு அழிந்திட்டு
ஐம்மேலுந்தி அலமந்த போதாக
அஞ்சேலென்று அருளும்
பெருமானே..!! போற்றி! போற்றி!!
சங்கரா போற்றி!
மங்கையோர் பங்கா போற்றி !
பிறப்பும் இறப்பும் ..! ஈசா ..!! உன் விளையாட்டு என்பதா?
அவரவர் வினைகளின் வழி வந்தது என்பதா?
விடை காணவே விடுத்தேன் உன்பால் மடல்,
அன்பினால் கை தொழுதலன்றி வேறு பண்பிலேன்;
தில்லை நட்டம் பயிலும் நம்பனே
காத்தருள வேண்டுகிறேன்.
இறவாமல் இருக்க வேண்டும் !! அல்லது
பிறவாமல் இருக்க வேண்டும் இது முடியாத காரியமா?
இறப்பதும் பிறப்பதும்: பிறப்பதும் இறப்பதுமாக
மாறி,மாறி உழன்று கொண்டே
இருப்பது துன்பம் இல்லையா..?
மரணம், அடுத்த பிறப்பிற்கான முன்னுரை.
பிறப்பு, மரணத்திற்கான முடிவுரை என்பர்.
ஒவ்வொரு ஆன்மாக்களும் தாம் எடுக்கவேண்டிய
அடுத்தடுத்த பிறப்புகள் என்ன என்று கணக்குப் பார்த்து
அனுப்பி வைக்க உம்மால் (ஒருவனால்) மட்டும் எப்படி முடிகிறது.?
யானை முதலாக எறும்பு ஈறாக எத்தனை படைப்புகள்.
எத்தனை விதமான யோனி பேதங்கள்.
'உரை சேரும் எண்பத்து நான்கு நூறு ஆயிரம் ஆம் யோனி பேதம்
நிரை சேரப் படைத்து, அவற்றின் உயிர்க்கு உயிர் ஆய்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அங்கங்கே நின்றான்கோயில்' என்பார் காழிப் பிள்ளையார்.

அனைத்துயிர்களையும் காத்தும், படைத்தும். கரந்தும் விளையாடும் பரமன் நீ! தேவன் நீ ! அத்தன்நீ ! அப்பன்நீ ! அன்னை நீ!

முதல்வன் நீ எல்லாம் நீயே!!

என்றைக்கோ எப்பொழுதோ படித்தது, நீவீர் அனைத்தும் அறிவை ஆயினும் ஆசை பற்றிப் பகிர்கின்றேன்.

மானுடப் பிறவி எவ்வளவு அரிது என்பதைச் சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர்

பரவை வெண்டிரை வடகடற் படுநுகத் துளையுட்
டிரைசெய் தென்கட லிட்டதோர் நோன்கழி சிவணி
யரச வத்துளை யகவயிற் செறிந்தென வரிதாற்
பெரிய யோனிகள் பிழைத்திவண்? மானிடம் பெறலே."

வட கடலில் நுகத்துளையோடு கூடிய ஒரு கழி தண்ணீரில் மிதந்து செல்கிறது; தென் கடலில் மற்றொரு கழி மிதந்து செல்கிறது. இந்த இரண்டும் ஒன்றை ஒன்று சந்திப்பது மிக மிக அரிது. அப்படியே சந்தித்தாலும் அவ்விரண்டு துளைகளிலும் ஒரு கோல் நுழைவது அரிதினும் அரிது. இந்த இரண்டு கழிகளும் ஒன்றை ஒன்று சந்தித்து ஒரு கோல் நுழைந்து விட்டால் அது எவ்வளவு பெரிய அதிசயம் ஆகும்? அத்துணை அரிது நமக்கு மானுடப் பிறவி கிடைத்திருப்பது என்கிறார். இந்த உவமை நச்சினார்க்கினியர் உரையிலும் வருகிறது:

'தென்கடலிட்டதோர் திருமணி வான்கழி வடகடனுகத்துளை
வந்து பட்டாஅங்கு

என்று சிந்தாமணியில் வேறு ஒரு இடத்திலும்

வடகடலிட்ட ஒரு நுகத்தின் ஒரு துளையில் தென்கடலிட்ட
ஒரு கழி சென்று கோத்தாற் போல'

எனவும் (இறை சூ உ. உரை)

'வளைபயில் கீழ்கடனின்றிட மேல்கடல் வானுகத்தின்.
துளை வழி நேர்கழி கோத்தென'

(திருச்சிற். 6) எனவும் பல இடங்களில் காண்கிறோம்.

தமிழ் மூதாட்டி ஔவை கிழவி,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மனிதப்பிறவி அரிதென, அகம் மகிழ்ந்து, முருகனிடம்,

'அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிடர் ஆதல் அரிது
மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
தானமும் தவமும் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.'

என்கின்றாள்

மனிதப் பிறவி, மகத்தானப் பிறவி அல்லவா ?

அதனைக் கொண்டாட வேண்டாமா?!

உன்னை வழிபட்டு உய்ய கிடைத்தது
இப்பிறப்பு என்று ஆகமங்கள்
அனைத்தையும் கற்றுத் தேர்ந்த
சகலாகம பண்டிதர். அருணந்தி சிவனார்
சித்தியாரில் உரைத்தைக் கண்டுணர்ந்தேன்.

'மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன்றனை அர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ.'

இறைவனாகிய உன் அடியைத் தொழுதலே மனிதராகப் பிறந்து, அறிவு படைத்த தன் பயனாகும்.

'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.'

வள்ளுவர் வாக்கும் இதனை மெய்ப்பிக்கின்றது.

காரை பேயார், கசிந்துருகி

உன்முன் வேண்டுதல் வைத்தாரே !

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.'

'ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாந டம்செய் வரதர்பொற் றாள்தொழ. '

தேன் சேர்ந்த மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த தில்லைப் பதியிலே, பெருங் கூத்தைச் செய்கின்ற வரதனுடைய பொற் பாதங்களை வணங்க, ஊன் பொருந்திய உடம்புடன் சேர்ந்த மானுடப் பிறவி எடுத்த உயிரே; தான் பெற்ற உறுதிப் பொருளை அடையும்; தாள் தொழப், பிறவி உறுதியைச் சாரும் என்று அருளியுள்ளார் சேக்கிழார்.

'மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாத மேமனம் பாவித்றேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற வாத தன்மைவந் தெய்தினேன்...'

மற்ற பற்றுதல்கள் எனக்கு இல்லாமல் உன் திருவடிகளையே மனதில் நினைத்தேன். பெற்றதால் பிறந்தேன் இனி பிறவாத தன்மை அடைந்தேன் என்கிறாா் நாவலூரார்.

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தொஃறோணி கண்டீர் ..... காழிச்
சம்பந்தன் தன்மாலை ஞானத் தமிழ் ' அருளாளர்கள் அருளிய யாவும் பெருமானே நீ உள்ளிருந்து உரைத்தவை, 'எனதுரை தனதுரையாக எனக் காழி வேந்தர் அருளியது கொண்டு அறிந்தேன்.

உன் திருவடியேபுகலிடமாகக் கொண்டேன்.
போற்றி! போற்றி! சய சய போற்றி.!

திருச்சிற்றம்பலம்.

வணக்கத்துடன்
அடியவர்க்கு அடியவன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

" நூலாசிரியரும், உரையாசிரியரும் "

சிவத்தமிழ்ச் செல்வர், நாவரசர், திருக்குறள் திலகம், பேராசிரியர்,

முனைவர் மூ.சிவச்சந்திரன்

ஆண்டவனாலும், அருளாளர்களாலும் வளர்க்கப்பெற்ற மொழிகள் இரண்டு 1.சமஸ்கிருதம் என்னும் வடமொழி, 2.தமிழ்மொழி இவ்விரண்டும் தவிர ஏனைய மொழிகளும் இறைவனின் அருளுக்கும், அறிஞர்களின் சிறப்புக்கும் உரியனவே.

ஒரு மொழியில் கவிஞர்களால் உருவாக்கப் பெற்ற "மூல நூல்கள் படைப்பு நூல்கள்" ஆகும். அவற்றைப் புரிந்து கொள்ள, தக்கவர்கள் எழுதித் தந்த "விளக்க நூல்கள் உரைநூல்களாகும்." படைப்பாளர்களின் படைப்பினைப் புரிந்து கொள்ள அவர்கள் உயரத்திற்குச் சென்று உரை எழுதித் தந்தவர்கள் தாம் முன்னே வாழ்ந்த உரையாசிரியர்கள் ஆவர். பூட்டிய பூட்டிற்கு உரிய சாவி கிடைத்தால் அது திறந்து கொள்வது போல. பல்வேறு இலக்கண, இலக்கிய நூல்களுக்கு உரையாசிரியர்களின் உரைகள் தாம் சாவிகளாகப் பயன்படுகின்றன. இங்ஙனம் உரை விளக்கம் தரும் உரையாசிரியர் எந்த வகையிலும் நூலாசிரியர்களை மிஞ்சுவதற்கு எண்ணுவது இல்லை. ஏனென்றால் நூலாசிரியர் இல்லையென்றால், நமக்கு உரை எழுத வாய்ப்பில்லை என்பதைப் புரிந்து வைத்திருந்தார்கள். இது, ஒருவகையில் பண்பாட்டுத் தடயத்தில் ஓர் அடக்க உணர்வாகும். இதற்கு மேற்கோள் சொல்ல வேண்டுமானால் கீழ் வருமாறு கூறலாம்.

1. குரு – சீடன்
2. கணவன் – மனைவி
3.தலைவன் – தொண்டன்
4. அரசன் – குடிமகன்

என நான்கு வகையாகக் கூறலாம்.

இனி, நூலாசிரியரின் படைப்பு நூல் பற்றிய விளக்கங்களையும், அதற்கான உரை விளக்கங்கள் பற்றியும் காண்போம்.

எந்த நூல் படைக்கப்பட்டாலும் கீழ்வரும் இலக்கணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். (இது, இன்று தோன்றியுள்ள புதுக்கவிதை, நாவல், சிறுகதை, திரைப்படக் கவிதை, நாடகங்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவற்றிற்குப் பொருந்தாது.)

"நூலின் இயல்பே நுவலுங்காலை ஓரிரு பாயிரம் தோற்றி
மும்மையின் ஒன்றாய் நாற்பொருள் பயத்தொடு
எழுமதம் தழுவி ஐயிரு குற்றமும் அகற்றி
அம்மாட்சியோடு எண்ணான்கு உத்தியின்
ஒத்துப்படலம் என்னும் உறுப்பினில்
சூத்திரம் காண்டிகை விருத்தியாகும்
விகற்ப நடைபெறுமே"

என்பது, நூலின் இலக்கணத்தைத் தொகுத்துக் கூறுகிறது. ஒரு நூல் என்றால் கீழ்க்காணுமாறு இலக்கணங்கள் பெற்றிருக்க வேண்டும்.

1.பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் எனும் இரண்டு.

2. முதல்நூல், வழிநூல், சார்புநூல் என்னும் மூன்றில் ஒன்றாய் இருத்தல் வேண்டும்.

3.அறம்,பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களைக் கூறுவதாக இருத்தல் வேண்டும்.

4.உடன்படல், மறுத்தல் முதலான ஏழுவகை மதங்களைக் (கொள்கைகளை) கொண்டிருத்தல் வேண்டும்.

5.குன்றக்கூறல், மிகப்படக் கூறல் முதலான பத்து வகைக் குற்றங்கள் நீங்கியிருத்தல் வேண்டும்.

6.சுருங்கக் கூறல், விளங்க வைத்தல் முதலான பத்து அழகுகளோடு இருத்தல் வேண்டும்.

7. நுதலிப்புகுதல், ஓத்துமுறை வைப்பு முதலான 32 உத்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

8. நூலின் உட்பிரிவு, பெரும்பிரிவு எனப் பிரிக்கப் பட்டு ஓத்து, படலம் என உள் தலைப்பு இட்டு இருத்தல் வேண்டும்.

9. "சிறுகக் கட்டிப் பெருகவாழ்" என்பது போல, சொற் சிட்டுக்களாகப் பாடல்கள் அமைதல் வேண்டும்.

10. இங்ஙனம் உருவான நூலுக்குச் சிற்றுரை என்றும், பேருரை என்றும் இரண்டு வகையான உரைகள் எழுதப் பெறல் வேண்டும். சிற்றுரையைக் காண்டிகை உரை என்றும், பேருரையை விருத்தியுரை என்றும் கூறுவர்.

இங்ஙனம் தான் முன்னே தோன்றிய நூல்கள் உருவாகியுள்ளன. தொடர்ந்து சிந்திப்போம்.

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

திருச்சிற்றம்பலம்

வாழ்க்கை ஒரு வரமா? சாபமா? வரமே!

பேராசிரியர் த.அகரமுதல்வன்

"வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி! மதித்திடுமின்!" என்றார் ஒருவர். அவர் சகல சுகபோகங்களையும் அனுபவிக்க அரசரல்லர், சமீன்தாரல்லர், மிட்டா மிராசல்லர், பிறந்தது முதல் இறுதி வரை அடுத்தடுத்துத் துன்பங்களையே அனுபவித்தவர். இளமையில் இருமுது குரவரையும் இழந்தார். தமக்கைக்கு மணாளனாக வரவிருந்த மாவீரரையும் இழந்தார். நிலையாமையை நினைந்துருகினார். சமணம் சார்ந்தார்; சுமார் 50 ஆண்டுகள் கடுந்துறவு வாழ்வு; இன்பம் என்ற பேச்சுக்கே இடமில்லாத கடுக்காய் வாழ்வு.

தமக்கையர் ஈசனை வேண்ட, ஈசன் அவருக்கு வயிற்று வலி தந்து தமக்கையார்பால் வரவழைத்தான். தமக்கையார் வழிகாட்ட அவர் இறைவனைப் பாடினார். திருவதிகைப் பெருமான் அவருடைய நோயைப் போக்கினான்; திருநாவுக்கரசர் எனத் திருநாமமும் சூட்டினான்.

அன்று முதல் அவர் பணிந்து பணி செய்யத் தொடங்கினார். அவர் பாடியது தேவாரம், பணிசெய்யக் கையிற் பிடித்தது உழவாரம். இரு வாரங்களும் அவருக்கு வாரங்களல்ல, அவர் பெற்ற வரங்கள்.

திருக்கோயில் தொறும் சென்று அவர் தேவாரம் பாடினார்; தெருக்கள் தொறும் உழவாரப்பணி செய்தார். "பார்வாழத் திருவீதிப் பணி செய்தார்" என்பார் தெய்வச் சேக்கிழார்.

அவர் சமண சமயத்தை விடுத்துத் தாய்ச் சமயத்துக்கு வந்தபோது, அவருக்குப் பிறர் விளைவித்த துன்பங்கள் ஒன்றா? இரண்டா? அவரைக் காளவாயினுள் வைத்துக் கொளுத்தினர்.

அவருக்குக் காளவாய் நெருப்பு, மாசில் வீணையாகவும் மாலை நேரத்துக் குளிர் நிலவாகவும், வீசும் தென்றலாகவும், வீங்கிள வேனிற் காலமாகவும், வண்டுகள் இசைபாடும் மலர்கள் நிறைந்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொய்கையாகவும் குளிர்ந்தது.

ஈசன் எந்தை இணையடி நீழலைத் தேனித்திருப்பாருக்கு அங்கமெல்லாம் குளிரும். அவருக்கு ஈசன் நல்லூரில் தீட்சை தந்த போது, அந்தச் சுகத்தை, "நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்" என்றல்லவா அனுபவித்துப் பாடினார். அப்படித்தான் அவருக்குக் காளவாய்,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

நனைந்தனைய திருவடியும் ஈசன் இணையடிநீழலும் இன்பம்! இன்பம்! இன்பமே!

அவ்வின்பத்தை அனுபவிக்கும் வாழ்வு ஒரு வரந்தானே.

அடுத்து ஒரு காட்சி.

ஏழு நாட்களுக்குப் பின் நீற்றறையைத் திறந்து பார்த்த போது, பூத்த புதுமலராய்ப் புன்னகைக்கும் வெண்ணிலவாய் அந்த மனிதர் ஆனந்த நிலையில் அமர்ந்திருப்பதைக் கண்ட சமணர் அரண்டு போயினர்.

அடுத்து அவரை என்ன செய்வதென்று ஓர் அவசரக் கூட்டம் நடத்தினர்.

அரசரின் அனுமதி பெற்று அவருக்கு நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணக் கொடுத்தனர். உவகையுடன் வாங்கி உண்டார் நாவரசர்.

காப்பாற்ற ஒருவன் இருக்கிறபோது கவலை எதற்கு?
பாற்கடல் நஞ்சையே பங்கி உண்டவர்க்குப்
பாற்சோற்று நஞ்சையா மாற்ற முடியாது?
தஞ்சமடைந்தவர்க்குத் தகாதவர்கள் கொடுத்த
நஞ்சை அமுதாக்கினார் நங்கள் பெருமான்.
நெஞ்சுருகப் பாடுகிறார் நம் செந்தமிழ்ச் சேக்கிழார்.,
"நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு" என்று
புஞ்சை நனிபள்ளியில் அந்நிகழ்வை நினைந்து
அஞ்சொலால் பாடுகிறார் அப்பர் பெருமானும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"வஞ்சனை பாற்சோ றாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமுது ஆக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே."
அடுத்து ஒரு கொடுஞ்செயல்.
அப்பர் மீது மதயானையை ஏவினர் கொடியோர்
அஞ்சுவாரா அப்பர்?
அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே!
உச்சிமீது வானிடிந்து வீழினும் அச்சமென்பதில்லையே!
எனப்பாடிய நம் பாரதியின் பாட்டனல்லவா
நம் நாவரசு!

ஆரவாரமாக வந்த ஆனையைப் பார்த்து நாயனார்,

சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்த் திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை யுடையும்
வளரும் பவள நிறமும்
அண்ணலரண் முரணேறும்
அகலம் வளாய வரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்.
அஞ்சுவது யாதொன்றும் இல்லை!
அஞ்ச வருவதும் இல்லை.

என்று முழங்கினார். அந்த மதயானை ஏவியவர்களையே ஏறி மிதித்தது. ஓடியவர்களைத் தேடிப்பிடித்துக் கொன்றது.

தன்வினை தன்னைச் சுடும்!

கடைசியாக, அப்பரைக் கல்லில் கிடத்திக் கயிற்றால் பிணைத்துக் கடலுக்குள் விட்டுக் கொல்வதெனக் கூடி முடிவெடுத்து, அவ்வாறே செய்தனர் அறிவிலிகள்.

ஆனால் ஐந்தெழுத்தை ஓதிக் கொண்டிருந்த அப்பரைப் பிணைத்திருந்த கல் மிதந்தது; கயிறும் அறுந்தது. கல்லே தெப்பமான கதையிது.

இருவினைகள் ஆகிய கயிறுகளால், ஆணவம்
என்னும் கல்லோடு இறுகப் பிணித்து
பிறவியாகிய கடலில் விழும் மாக்களையே
கரையேற்றும் நமச்சிவாயம் நாவுக்கரசை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கரையிற் கொண்டுவந்து சேர்த்ததில்
வியப்பேதும் இல்லையே!

திருப்பாதிரிப் புலியூரிலுள்ள கரையேற விட்டகுப்பம் என்ற இடத்தில் கரையேறினார் அப்பர்.

இப்படிப் பல இன்னல்களையெல்லாம் அனுபவித்த அப்பர்தான், தில்லை வாணனுக்கு அன்பு பூண்டு அடித்தொண்டு செய்வோரை அல்லலும் அருவினையும் என்ன செய்துவிடமுடியும்? என்று கேட்கிறார்.

"அல்லல் என்செயும்? அருவினை என் செயும்?
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என் செயும்?
தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டே னுக்கே! (5-1-4)
ஆதலின் துன்பங் கண்டு துவளாமல் இறைவனை நம்பி
இருப்பவர்க்கு
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை!
எனவே, இவ்வாழ்க்கை சாபமல்ல;
ஒரு வரம்! பெறற்கரிய பெருவரம்!

திருச்சிற்றம்பலம்.

தென்குமரி, வடபெருங்கல்
குண குட கடலா எல்லை,
குன்று, மலை, காடு, நாடு
ஒன்று பட்டு வழிமொழிய
கொடிது கடிந்து, கோல் திருத்தி
படுவது உண்டு, பகல் ஆற்றி
இனிது உருண்ட சுடர் நேமி
முழுது ஆண்டோர் வழி காவல!

– புறநானூறு – 17.
குறுங்கோழியூர் கிழார் பாடியது.

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

உ

திருச்சிற்றம்பலம்

பெண்ணின் தனித்தன்மை தாயாய் தன்னை இழக்கத்தான்
மலரின் தனித்தன்மை காயாய் தன்னை இழக்கத்தான்
காயின் தனித்தன்மை கனியாய் தன்னை இழக்கத்தான்
விதையின் தனித்தன்மை விருட்சமாய் தன்னை இழக்கத்தான்

காக்கப்படும் தனித்தன்மையெல்லாம் உயர்ந்த ஒன்றில் இழப்பதற்காகும்.

தனித்தன்மையின் தனித்தன்மை இதுவேயாகும்.
பிறப்பின் நோக்கம் பிறவாமை வேண்டித்தான்.
அக்காரணம் களையும் காரியம்
அப்பேற்றினைப் பெரும் வழியாகும்.
நதியின் தனித்தன்மை கடலாய் தன்னை இழத்தலே
நதியின் ஓயாத ஓட்டமெல்லாம்
கடலைத் தேடும் காரியம் தான்
செல்லும் வழியெல்லாம்
செழிப்பாக்கும் செயலுக்குப் பின்தான்
கடலில் கலக்கும் காரியம் கைவரும்
மனிதனின் தனித்தன்மை மகேசனில் தன்னை இழக்கவே
மண்ணில் காணும் அனைத்தையும் மகேசனின் மற்றுமோர் உருவெனக் காண்டல்
மகேசன் தனைச்சாரும் மகத்தான வழியாகும்.
உயர்ந்த ஒன்றில் தனை இழக்காமல்
தனித்தன்மை காத்த இலையெல்லாம்
சருகாய் மண்ணில் சாய்ந்து தான் போயின
உயர்ந்த ஒன்றில் தன்னை இழத்தலே
உயர் வாழ்க்கை நெறியாகும்.-

– ஆசிரியர்.

திருச்சிற்றம்பலம்

Owned and published by S. DHAKSHINAMOORTHY. Published from, 55,North Street, Arupathumoovar Pet,Koranad, MAYILADUTHURAI - 609001. Printed By S. SELVAM at SRV PRINTERS, S.R.Complex, Main Road, Sitharkad, Mayiladuthurai- 609003. Editor - S. DHAKSHINAMOORTHY.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உ

திருச்சிற்றம்பலம்

மகரத் தலைநாள்

குருபூஜை நன்னாளில்

குருமகா சந்நிதானம்

அவர்களின் திருவடிகளைப்

போற்றிப் பணிந்து வணங்கி

மகிழ்கிறோம்

இங்ஙனம்,

சிவச்சுடர் குழுமம்

உ

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனகுரு முதல்வர்

அருள்திரு நமச்சிவாய மூர்த்திகள் குருபூஜை விழா நாளில்

24 ஆவது ஸ்ரீ ல ஸ்ரீ குருமகா சந்நிதானம்

அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

அவர்கள் திருவடிகளை மனம், மொழி, மெய்களால்

போற்றிப் பணிந்து வணங்கி மகிழ்கிறோம்.

இங்ஙனம்,

ஸ்ரீ மயூரநாத சுவாமி திருக்கோயில் தேவஸ்தானம்

கண்காணிப்பாளர், அலுவலர்கள் & ஊழியர்கள்,

மயிலாடுதுறை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

SHIVACHUDAR - Tamil Monthly Magazine * Registered with Registrar of News Papers for India Under No:TNTAM/2013/53844*. Date of Publication 5th of Every Month. Registration for posting Under the Registration No. SP / MYL / 01 / 2023-25.
Date of Posting 10 th - 12 th of Every Month.

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். – குறள் 543

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும். – குறள் 388

அனுப்புதல்:
சு. தட்சிணாமூர்த்தி, ஆசிரியர்
55.வடக்கு வீதி, அறுபத்து மூவர்பேட்டை,
கூறைநாடு, மயிலாடுதுறை–609 001,
செல் : 9442392021

சிவத்திரு...
அவர்கள்
....
....
....

Center for Shaiva Studies, Pondicherry Collection